முருகப்பெருமான் துணை

**மகான் கலைக்கோட்டு முனிவர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**12.01.2024,** வெள்ளிக்கிழமை

1. பாவகரும வினை போக்கி
பாமரர்க்கும் ஞானமருள
அவதாரம் எடுத்த ஞானியே
அரங்கனே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது சிலை திங்கள்
குறைவிலா இருபானேழ் திகதி புகர் வாரம்
(சோபகிருது வருடம் மார்கழி மாதம் 27 ம் நாள், 12.01.2024, வெள்ளிக்கிழமை)
தெரிவிப்பேன் கலைக்கோட்டு முனிவரும்
துல்லிய ஆசிதனை அரங்கர் கேட்க
3. கேட்கவே உலகநலமுற உரைப்பேன்
கேட்டிடுவாய் அன்னதான சேவை
திட்டமிட்டு துவக்கி உலகினில்
தொடர் தருமம் செய்து வருக
4. வருகவே உலகம் எங்கிலும்
வலுவான தருமசாலைகளும்
பெருகிவர உலகினில் பசிபிணி
பிரச்சினை அகன்று மேவி
5. மேவியே எங்கும் தருமபலம்
முன்வந்து மக்களே செய்யும்படி
அவனியில் தரும சக்தி வளர்த்து
அனைவருமே தருமவான்கள் எனும்
6. எனும் தனி அடையாளம் கூடி
எங்கும் தருமவான்கள் படை
ஞானவான்கள் படைகளாக மாறி
ஞானயுகம் படைக்கும் வண்ணம்

7. வண்ணம் மாற்றம் நிகழும்
வருங்காலம் அஞ்ஞானவான்களை
மண்ணுலகில் விரட்டி ஞான ஆட்சி
மகான்கள் துணைபட நிறுவ நேரும்

8. நேருமை கொண்ட மக்கள்
நீதி தவறா மக்களுமாக
வருங்காலம் மாற்றம் கண்டு
வையகம் பாதுகாப்புப் பெறும்

9. காப்புத்தரும் மகா ஞானி
கலியுகத்தின் சிறந்த ஞானியை
ஒப்புக் கொண்டு மக்கள் வர
ஓங்காரக் குடில் தொடர்பு கொண்டு

10. கொண்டுமே ஞானம் பயில
குருவே எல்லாமென சரணாகதி
உண்டாக்கி மக்கள் செயல்பட
உண்மைபட எங்கும் மாற்றம்

11. மாற்றம் உலகமாற்றமாகக் கண்டு
மனிதர்கள் ஆட்சி முடிவுற்று
ஆற்றல் மிக்க ஞான ஆட்சி மலரும்
அறிவித்த துல்லிய ஆசி முற்றே

—சுபம்—